உ

கணேசன் துணை.

ஸ்ரீ பிரான்மலையென்னும்

கொடுங்குன்றக் கலித்துறைமாலை



இஃது

அரிவையூர் வடக்குவட[illegible]க்காரர்களது

வேண்டுகோளின்படி [illegible] திருப்புத்தூர் [illegible]

இராமநா[illegible]புரம் ஜில்லா [illegible] வித்வான்

சிங்கம்புண[illegible]ராமப்பிரசித்தியுள்ள

முத்துவடுகநா[illegible] ஞானபு[illegible] ஐயா

சேவகப்பெரும[illegible]ள்களால்,

அவர்[illegible]புதுக்கியும்,

திருத்திய[illegible]

[illegible]க்குழாசிவீதி

மதுரை வட[illegible]ச அச்சியந்திரசாலையில்

ஸ்ரீராமச்சந்திர விலா[illegible]ப்பெற்றது.

பதிப்பிக்க[illegible] 1920.

உ

கணேசன் துணை.

ஸ்ரீ பிரான்மலையென்னும்

கொடுங்குன்றக் கலித்துறைமாலை



இஃது

அரிவையூர் வடக்குவளவு நகரத்தார்களது

வேண்டுகோளும் பொருளுதவியுங்கொண்டு

இராமநாதபுரம் ஜில்லா திருப்புத்தூர் தாலூகா

சிங்கம்புணரி வித்வான்

முத்துவடுகேன நாமப்பிரசித்தியுள்ள

சேவகப்பெருமாளுபாத்தியாயர்

அவர்களால்,

திருத்தியும் புதுக்கியும்.

மதுரை வடக்குமாசிவீதி

ஸ்ரீராமச்சந்திர விலாச அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

1920.

முகவுரை.

இந்நூல் நந்தமிழ்மக்கள் கற்றுய்தற்கேய சிலநீதிகளைத் தெருட்டுவதாயது இந்நூல் சுமார் 15 வருஷங்களுக்குமுன் இத்துறை கடீட்டிய கையேட்டுப்பிரதியொன்றெய்தப்பெற்றுநோக்குமிடத்துக் காப்புச் செய்யுளும் மாலையெனற்கேற்ப இருக்கவேண்டிய துறைகண்டுப்பதுள் ஐந்து துறைகளின்றியுமிருக்கப்பார்த்து இஃது நம்பாண்டிநாட்டுன் முக்யக்ஷேத்ரமாகிய கொடுங்குன்றேஸ்வரர் பரமான நூலாயிருப்பமையால் இதனைநாம் சுத்தபாடமாக்கி விடுபட்டுள்ள செய்யுட்களையும் பூரித்தச்சிடவேண்டுமெனும் அவா வுள்ளூன்றக் கொண்டிவந்திதுகாறும் எம்பெருமானது திருவருள் கூட்டாமையான் அச்சிடுவதிற் கொஞ்சமும் முயலாதிருந்தனன்” தற்காலந்திருவருள் கூட்டக்காவேரியென்னும் ஜீவநதியால் வளமைசான்ற சோழநாட்டின்கணுள்ள காவிரிப்பூம்பட்டினத்திருந்து பாண்டியனுலைழைத்து வருகவந் தெம்பிரானாகிய தம்பிரான்மலைக் கடவுட்க்கடிமைபூண்டளகேசனெப்பச்சிறந்துவாழும் அரிவையூர்ச் சைவசமையோன்னதராகிய வடக்குவளவு நகரத்தார்களது கூட்டமுகத்துப்புகுந் திந்துறைகளின தருமை கூறக்கேட்டுவந்துள்ளா அவர்கள் இந்நூல் அச்சேறிப் புத்தகரூபம் பெறுதற்குப்போதிய பொருடருகப் பெற்றுடனே இந்நூலில் பிற்காலத்தெழுதியோராற் சிந்தியிருக்கும் எழுத்து அசை சீர் தளை முதலிவற்றைச்செவ்வனே திருத்தியும் விடுபட்டுள்ள துறைகளைப்புதிதாகச்செய்துசேர்த்தும் அச்சிற்பதிப்பித்தனன்.

"நிற்க"

இந்நூலியற்றினர் இன்னாரென ஒருவாற்றானுந் தெரிகிற்றில கன்னபரம்பரையில் முதலைப்பட்டியென்னும் பதியினுள்ளவெறிமங்கைப் பாகப்புலவரெனப் பெரும்பாலார் கூறுகின்றனர் "தெரிக"

புதிதாச்செய்து சேர்க்கப்பட்டுள்ள துறைகட்கு தலைப்பில் ‡இந்தவிதமான குறிப்பிட்டிருக்கின்றன.

இங்ஙனம்
தூய அறிஞர் பாலன்புடைய
முத்துவடுகன்
சிங்கம்புணரி.

உ

திருக்கொடுங்குன்றக்
கலித்துறை மாலை.

ஸ்ரீ விநாயகர் காப்பு நேரிசை வெண்பா.

"பொன்னிலைய தாகப் பொலிகொடுங்குன் றப்பரமன்
முன்னிலையா கச்சொன் முதுநீதி" மன்னுங்
கலித்துறைமாலைக்கருளுங் கங்கைமுதன்மைமைந்தன்
கலித்துறையாணர்ப்பூங் கழல்"

"நூல்"

கல்லாமற் கேள்வியெனுந்தேனுணற்கு மெய்கற்றவர்பாற்
செல்லாமற் புண்ணிய மெள்ளேனும் வைகற்செயாமனன்றி
இல்லாம லொவ்வொருநாளும் பின்னுக இடாருனக்கே
நல்லார்களாம் வழிச்செலவார் கொடுங்குன்ற நாயகனே. (1)

தனைச்சூழ்ந்தவர்தந் தகைகாணலோடின் றருமொழியும்
வினைச்சூழ்ச்சியுஞ் சினமில்லாநடக்கநும் வேண்டிடினென்
னனைத்தே கொளுதலுமாமே தலைமைக்கழகதென்ப
நனைத்தே னொழுகப்பெறுங் கொடுங்குன்றுறை நாயகனே. (2)

திண்பார்த்திசையி னினைக்கினின்றெனத் தேருகினும்
எண்பாற்பிறப்பினை யாருஞ்சேறாவ் வெழிற்பிறப்புட்
பண்பார்ந்த நெஞ்சத்தவரோ டெஞ்ஞான்று மொருபடித்தாய்
நண்பாற்றி நட்கப்பெறின் கொடுங்குன்றுறை நாயகனே. (3)

அடற்பொறை மாநிலமேற்றந்தைதாயர்க் கடங்கிநிற்பார்
இடத்தேயுலகர்த மெண்ணமெல்லா மென்றிசைத்தல் பொய்யோ
கடைப்படக்கூட்டும் பொனென்றுகைத்தார் தங்கருத்திதுள்ளே
திடப்படத்தோன்றும் பராகொடுங்குன்றுறை தேசிகனே. (4)

வேண்டாபிறபகை தானழுக்காறுள மேனிலவ
ஆண்டார்தமக்கிடர் கூட்டுதற்கே யஃதமையு மன்றோ
ஏண்டாரணியிற் புலிமேனிபோற்றற் கிழுக்குநெறி
பூண்டார்விழிக்கெதிர் வாராக்கொடுங்கிரிப் பூசுரனே. (5)

மனைவாழ்க்கையினுக் குறுஞ்சில மேச்சமாகில்மேல்
வனைவார்புலனைந்தற வுழைப்பாரினு மாண்பரன்றே
முனைவாளெயிற்றரி நால்வாயினோடு முயங்கிமலர்ச்
சுனைவாயுறங்கப் பெறுங்கொடுங்குன்றுறை தூய்மையனே. (6)

காணாதொருவன்றனைப் பழித்தேகண்ணிற் காணும்வழி
நாணாதுரித்தமையப் பேசுநாவரிந் நானிலமேல்
வாணாள்வளத்தலிற் சாதனன்றாம்பிழை மாற்றுதற்குச்
சேணாகரெண்டவ மாற்றுங்கொடுங்கிரித் தேசிகனே. (7)

‡ நல்லாம்பலரிதருநா ளொவ்வொன்றையு நன்றின்வழிச்
செல்லாம்படிவிடுத்தே காமியச்சுமை தீர்ந்துநிலை
நில்லாதலைதல் பட்டெள்வரை நின்னடிநேசநெஞ்சத்
தில்லாரிருந்தெனிறந்தென் கொடுங்கிரியீசனே. (8)

இருக்கைத்தெருத்தொறு மெய்வேய்ந்து சுற்றுவரிற்புகுந்த
பெருக்கத்தினைக் கொளுங்கூற்றுவரே யெனப்பேசுவரால்
உருக்கத்தொடு ஞணை தீர்ந்தநின்றாட் டொண்டுடையவர்சீர்
சுருங்கப்படாதுயர்ந்துங் கொடுங்குன்றுறை தூயவனே. (9)

‡ தன்பாற்பிறர் நயஞ்செய்தற்கணா மகிழ்தன்னைத்தனெஞ்
சின்பாற்பெரி தறிந்துதானஃதே வழிச்சென்றுபெறு
வன்பாழ்மடர்க்கெனனை கூறுகிற்பேன்மது வார்ந்துசுனை
யின்பாற்பெருகப்பெறுங் கொடுங்குன்றுறை யீசனே. (10)

நீதித்துறைகற்று நின்றயலோர்க்கிது நீதியெனப்
போதிப்பது புகழின்றேலிழி வென்பபூதலமேல்
ஆதித்தியனிரதக் கோடரம்பு குந்தாறநிழல்
சாதித்திடுங் கொடுங்குன்றத்துண் மேவியசங்கரனே. (11)

‡ பிறர்க்குபகாரந் தனாவில்லதேனும் பிறர்செய்நன்றி
மறப்பதின்றாதனன்றா மென்பதெள்ளு மறந்திருப்பார்
சிறப்பதற்குன்னருள் சேருங்கொலோ விணிற்றேசின்மதி
யுறப்பெறுஞ்சென்னிக் கொடுங்குன்ற மேவியவுத்தமனே. (12)

‡ இன்னாளிது நன்றிதுவென் றுணருதற் கேதுசொல்லி
நன்னாகவுள்ளத் திருக்கறுப்பார் குருநாதரல்லாற்
பொன்னாகமஞ்சொலிக் கொள்வாரலப்பகை பொத்திநின்று
பன்னாகமஞ்ஞை யொடாடுங்கொடுங் கிரிப்பண்ணவனே. (18)

எல்லாதலத்து யருந்தலந்தானிலத் தேண்ணின்மல
மில்லாப்புனிதமன மன்றிமற்றிலை யென்பரன்றோ
சொல்லாத்துமார்த்த வினைமேதையர் சுனைதோறும்வரும்
பல்லாத்தருவ முதாருங்கொடுங்கிரிப் பண்ணவனே. (I4)

வணமன்னுபொற் பணிபூண்டாரணி மேன்மணியெனநற்
குணமென்னுமோரணி பூணுரெனிற்பழி கூடன்மெய்யே
உணர்வுன்னும் யோகர் தவச்சாலையி னழலுந்துபுகைக்
கணமன்னுமாமைக் கொடுங்குன்றமேவிய கண்ணுதலே. (15)

அனலைக்குளிரும்படி செய்யலாங்கொற்ற மாங்கல்வெண்ணெய்
எனநெய்த்துருகப் பணலாம்படவிட் டிகைநகைத்து
வினவப்புரிதலு மாமீனமார்க்கத்தின் மேவுநெஞ்சத்
தினரைத்திருப்பவு மாமோகொடுங்கிரித் தேசிகனே. (16)

பொன்படைத்தாலுந் திகாந்தமெட்டுங்கண்டு போற்றுதற்கே
கொன்படைத்தாலுங் கொள்சீலஞ்சிறப்பக்கை கூட்டிவைக்கு
நன்படைத்தாலு மின்றின்பம்புக னெறிநண்ணிவரா
மின்படைக்கார் தமக்கையாகொடுங்கிரி வித்தகனே. (17)

நல்லார்நடுவு ணகையுமன்னார்மு னடத்தலும்பண்
இல்லாவுரையுமன்னோர்க் கண்டெழாமையு மிட்டநின்பால்
அல்லார்க்கல தெதிர்ந்தார்க்கின்று மேன்மறையாகமநூல்
வல்லார்பெருகப் பெறுங்கொடுங் குன்றுறைமாதவனே. (18)

வெட்டிக்கைவேல் கொண்டுகுத்தினுந் தீயிடைவீழ்த்தினுஞ்சீர்
நட்டிப்படக்குடி கொள்ளைகொண்டாலுந்த னைக்கொடொன்றைச்
சுட்டிச்சொல்லிய விடார்விட்டுனு விழிருட்டுனடி
கிட்டிக்கதிபெற நிற்பார்கொடுங்கிரிக் கெண்ணியனே. (19

விருந்தினரைத் தமோடுவைத்தின் புளமேவுறுமா
றருந்தாதொளித் துணக்கல்லார்கற்றுன லுற்றுறும்பொன்
பொருந்தாணம் மில்லத்தெனத்தேறிய பெரும்போதர்மண்மேல்
வருந்தாதெனைப் புரந்தாளுங்கொடுங்கிரி மாதவனே. (20)

‡ கல்லாரையொட்டு நரன்றேபுகழ் நலன்கைப்பொருண்மற்
றெல்லாமிழந்த வராகிப்பணோர் தமிடத்துநண்ணற்
கில்லாதுநின்னருட் பேறேய்ந்திடா திடரேய்வரந்தோ
செல்லார்பொழிற் கொடுங்குன்றத்துண் மேவியதேசிகனே. (21)

பீச்சொற்பெறுந்தஞ்ச ராவார்தமக்ககன் மேதினிமேற்
றீச்சொற்றினை வரைநேரிற்புரம் புரந்திட்டுநிற்ப
தேச்சொத்துறு மென்றுயிர் துறப்பாரிமையோர் மருந்திற்
பாச்சொற்கவிஞர் கொண்டாடுங் கொடுங்கிரிப்பண்ணவனே.(22)

கல்வியுங் கல்விவழிக்கூடறிவுங் கருதினமுறை
யில்வழிப்பாழி பெறுதென்ப தோர்ந்திகமே லறிஞர்
சொல்வழித்தாமுறை தோமறப் போற்றுவர் துஞ்சியபின்
செல்வழிக்குத் துணைதேர்வார் கொடுங்கிரித் தேசிகனே, (23)

தலைத்தானொரு வனிடுக்கணைய் தாவணந்தாங்கு தற்கே.
நிலைத்தாற்ற னுள்ளத்துளே நின்று தோன்று நெடுங்கருவத்
தினைதாண்டக்குதல் வேண்டு மின்றேற்றளைத்தேய்த்துறுதுன்
பினைதான் பலதருமன்றோ கொடுங் கிரிப்பேறவனே. (24)

கருத்தோடு கற்றும் பராரோடுறவு கலந்திரப்பார்க்
குருத்தோடியன்றதந் துண்மை பொய்யாமை கொண்டோரல்லரே
தெருத்தோறு மேவிப்புணஞ்சேந்தி யேங்கித் தியங்கியின்னற்
பருத்தோடு கைப்பற்றி நிற்பார கொடுங்கிரிப் பண்ணவனே. (25)

நடுப்போந்து நந்தமர் நள்ளுநர் நந்தொழிற் காவர்நம்பாற்
கடுத்தோ ரெனச்சா தகமுந்திரியுங் கருத்தினில் வைத்
தடுத்தோ ரவைக்களத் தேவாழ்க்கை முற்று மடையநிற்பார்
எடுத்தோ ரடிவைப்ப ரோகொடுங் குன்றுறை யீசுரனே. (26)

சொல்வார் தமதிய னோக்காதுசொல் லியசொற் பொருளின்
நல்லார் பயன்கொள் ளுதனீக்கு தலுயர்ஞான மன்றோ
எல்லா ரிழைமங்கை பாகாவெனச்சுர ரேற்றுதற்கேய்
செல்லார் நெடுங்கொடுங் குன்றத்துண் மேவிய தேசிகனே. (27)

நன்சொற் சொலாக்கய வோருங்கொண்டாடி நயஞ்செயச்செய்
இன்சொற் சொலுதற் கெளிதாவிருக்க வஃதேனைவிட்டு
வன்சொற் சொலுஞ்செயற் கற்றுரைவெண்க மலத்துறைவோன்
புன்சொற் பெறற்கோ படைத்தான் கொடுங்கிரிப் புண்ணியனே.

நல்லாறு நோக்குகிற் பார்க்காசமேய நவின்றுநன்ற
தல்லாது கூறிப் பகற்போதுபோக்குவிக் காதெதிர்ந்த
சொல்லா லொழிப்பித் திடவல்லகல்வியந் தோழர்தங்கட்.
இல்லா நகர்புலிக் காடாங்கொடுங்கிரி யீசுரனே. (29

நாதாமண் ணுண்ணத் திருவாய்மலர்ந்த வனண்ணரிய
பாதாவபேத வஞ்ஞான வமோக பராபரநற்
போதாற் பொதிய முனிமற்றடியரும் போற்றவொளிர்
வேதா நல்வாழ்வுதந் தாள்வாய் கொடுங்குன்றுள் வித்தகனே. (3

முற்றிற்று.

ஸ்ரீகொடுங்குன்றேஸ்வரர் திருவடிகளே சரணம்.

S.R.Y PRESS, MADURA.